
# திராவிடத்தால் வாழ்கிறோம்

**1104**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# திராவிட மாடல் அரசு

**நீரை.மகேந்திரன்**

**157**

`முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு நம் முதலமைச்சர் செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி...

தமிழ்நாட்டின் தொழில்துறை, வளர்ச்சியில் பெரும் பாய்ச்சலை நிகழ்த்திக் கொண்டிருக்கிறது, திராவிட மாடல் அரசு. அதே நேரத்தில் சூழலியல் காப்பு, பொழுதுபோக்குப் பூங்கா என வாழ்வியல் தேவைகளுக்கும் உரிய முக்கியத்துவம் அளித்து, பல பணிகளை நிறைவேற்றி உள்ளது. அந்த வகையில், தமிழ்நாட்டின் சுற்றுலாத் துறையும் திராவிட மாடல் ஆட்சியில் புதிய வளர்ச்சியை நோக்கி பயணித்துக்கொண்டிருக்கிறது. கடந்த ஐந்து



ஆண்டுகளில், சுற்றுலாத் துறையின் மேம்பாட்டிற்காக, 612 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி வளர்ச்சியை வேகப்படுத்தியிருக்கிறது தமிழ்நாடு அரசு.

தமிழ்நாட்டின் மிக நீண்ட கடற்கரை, பழம்பெரும் திருக்கோயில்கள், இயற்கை எழில் கொஞ்சும் மலைகள் மற்றும் வனப்பகுதிகள் ஆகியவை எப்போதும் பலதரப்பட்ட மக்களையும் சுற்றுலாப் பயணிகளையும் ஈர்ப்பவை.

கடந்த ஐந்தாண்டுகளில் மட்டும் தமிழ்நாட்டின் சுற்றுலா மையங்களுக்கு 128 கோடியே 97 இலட்சம் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளும், சுமார் 45 இலட்சம் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளும் வருகை தந்துள்ளனர். இந்த எண்ணிக்கையை அதிகரிக்கவும், சுற்றுலா வணிகத்தில் புதிய முதலீடுகளை ஈர்க்கவும் ‘தமிழ்நாடு உலகளாவிய சுற்றுலா உச்சி மாநாடு 2026’ நடத்தி, இந்தியாவின் இதர மாநிலங்களைத் திரும்பிப் பார்க்க வைத்துள்ளது நம் அரசு. குறிப்பாக, இந்த உச்சி மாநாடு தமிழ்நாட்டில் முதல்முறையாக நடத்தப்பட்டுள்ளது.

செங்கல்பட்டு மாவட்டம், மாமல்லபுரத்தில், 2026 பிப்ரவரி 2-ஆம் தேதி, ‘தமிழ்நாடு உலகளாவிய சுற்றுலா உச்சி மாநாடு 2026’-ஐ தொடங்கிவைத்த திராவிட மாடல் நாயகர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில், பல்வேறு சுற்றுலா நிறுவனங்களின் புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் மேற்கொள்ளப்பட்டன.

குறிப்பாக, சுற்றுலா வணிகத் துறையில் தனியார் முதலீடுகளை ஈர்ப்பது, இந்தியாவின் சிறந்த சுற்றுலா முதலீட்டுத் தளமாக தமிழ்நாட்டை நிலைநிறுத்துவது, முதலீட்டாளர்கள்-சுற்றுலா நடத்துபவர்கள் மற்றும் தொழில் துறையினரை ஒரே தளத்தின் கீழ் அரசுடன் ஒன்றிணைப்பது, பார்வையாளர் அனுபவங்களை மேம்படுத்தும் மற்றும் வருவாய் வழிகளை விரிவுபடுத்தும் புதுமையான சுற்றுலா தயாரிப்புகள் மற்றும் உள்கட்டமைப்புத் திட்டங்களை ஊக்குவித்தல் போன்றவை, இந்த மாநாட்டின் முக்கிய நோக்கமாக இருந்தன.

இந்த உச்சி மாநாட்டினைத் தொடங்கிவைத்து, சுற்றுலா நிறுவனங்களின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த அரங்குகளையும் முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்.

மாநாட்டில் 22,794 கோடி ரூபாய் உறுதியளிக்கப்பட்ட முதலீடு மற்றும் 65,937 நபர்களுக்கு உறுதியளிக்கப்பட்ட வேலைவாய்ப்பு என்ற வகையில் 127 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டன.




## தமிழ்நாடு உலகளாவிய சுற்றுலா உச்சி மாநாடு - 2026

### சுற்றுலா பயணிகளின் Favourite Destination தமிழ்நாடு!



நிறுவனங்களின் முதலீட்டுத் திட்டங்களின் அடிப்படையில், முதலீட்டு மானியம் - கூடுதல் முதலீட்டு மானியம் - கட்டமைப்பு ஊக்கத்தொகை மற்றும் மின் பயன்பாட்டில் கட்டணச் சலுகை போன்ற முக்கிய சலுகைகளை வழங்க உள்ளது அரசு.

### கிராமிய அனுபவச் சுற்றுலா

தமிழ்நாடு சுற்றுலாத் துறை, தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்ககம் (Startup TN) மற்றும் தமிழ்நாடு வழிகாட்டி நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்து, சுற்றுலா புத்தாக்க ஹேக்கத்தான் (Tourism Innovation Hackathon) என்ற போட்டி நடத்தப்பட்டது.

தமிழ்நாட்டின் சுற்றுலா வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளிக்கும் உணவு சார்ந்த சுற்றுலா (Culinary Tourism), வேளாண்மை மற்றும் கிராமிய அனுபவச் சுற்றுலா, பாரம்பரியம் மற்றும் பண்பாட்டுச் சுற்றுலா, சூழலியல் மற்றும் சாகச சுற்றுலா, நலவாழ்வு மற்றும் மருத்துவச் சுற்றுலா, டிஜிட்டல் சுற்றுலா புத்தாக்கங்கள் எனப் போட்டிகள் நடத்தப்பட்டு, வெற்றி பெற்ற நிறுவனங்களுக்குத் தலா ஒரு லட்சம் ரூபாய் ஊக்கத்தொகையுடன் பாராட்டுச் சான்றிதழும் வழங்கி வாழ்த்தினார் முதலமைச்சர்.

> **“இயற்கை - வரலாறு - பண்பாடு - உணவு ஆகியவற்றுடன் உங்களை வரவேற்க, அன்பால் அரவணைக்க, தமிழ் மக்கள் இருக்கிறோம்”**

### நிறைவடைந்த பணிகள்

இந்த மாநாட்டில், சுற்றுலாத் துறை சார்ந்த இடங்களில் நிறைவடைந்த பல பணிகளையும் முதலமைச்சர் அவர்கள் தொடங்கிவைத்தார்.




பூம்புகாரில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் பல்வேறு அடிப்படை வசதிகள் - சிதம்பரத்தில் கட்டப்பட்டுள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக ஹோட்டல் - மாமல்லபுரம் மரகதப் பூங்காவில், ஒளிரும் பூங்கா மற்றும் பிற பொழுதுபோக்கு அம்சங்கள் ஆகியவற்றை துவக்கிவைத்தார். தவிர, திருக்கடையூரில் தமிழ்நாடு ஓட்டலுக்கு உணவகம் கட்டுவதற்கும் - தரங்கம்பாடியில் பல்வேறு சுற்றுலா வசதிகள் மேற்கொள்ளவும் அடிக்கல் நாட்டினார்.

மாநாட்டில் சிறப்புரையாற்றிய அவர், சுற்றுலாத் துறைக்குச் செயல்படுத்திய பல திட்டங்களைப் பட்டியலிட்டதுடன், “இது போதாது! தமிழ்நாட்டை நோக்கி சுற்றுலாப் பயணிகள் இன்னும் அதிகமாக வர வேண்டும்! “யாதும் ஊரே யாவரும் கேளிர்” என்று உலகத்தில் இருக்கும் அத்தனை மக்களையும் உறவினர்களாக நினைத்து, அன்போடும் நட்போடும் பழகுபவர்கள்தான் தமிழ்நாட்டு மக்கள்! அதனால், வெளி மாநில மக்களும் வெளிநாட்டு மக்களும் தமிழ்நாட்டிற்கு அதிகமாக வர வேண்டும்” என வேண்டுகோள் வைத்தார்.

குறிப்பாக, “தமிழ்நாட்டை, உங்களின் Favourite Destination-ஆக Bookmark செய்துகொள்ளுங்கள்! இங்கு இயற்கை - வரலாறு - பண்பாடு - உணவு ஆகியவற்றுடன் உங்களை வரவேற்க, அன்பால் அரவணைக்க, தமிழ் மக்கள் இருக்கிறோம்” எனச் சுற்றுலாப் பயணிகளுக்கு அழைப்பு விடுத்தார்.

“தமிழ்நாட்டிற்கு சுற்றுலாப் பயணிகளாக வரும் நீங்கள், உங்கள் நாடுகளுக்குத் திரும்பும்போது, மறக்க முடியாத நினைவுகளுடன் மட்டுமல்ல, அன்பு மிகுந்த சொந்தங்களையும் உங்கள் நெஞ்சில் சுமந்துகொண்டு செல்வீர்கள்!” என முதல்வர் கூறியது வணிக நோக்கம் கொண்டதல்ல; அதுதான் தமிழர் வாழ்வியல், ஆட்சியில் அதை நடத்திக் கொண்டிருக்கிறார், முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்.

**...சாதனை தொடரும்**

## ஏற்றிவிட்ட ஏணி, இடஒதுக்கீடு!

இடஒதுக்கீட்டின் அவசியம் குறித்து, சிவகங்கையைச் சேர்ந்த மருத்துவர் ஃபரூக் அப்துல்லா சமூக வலைதளத்தில் எழுதிய பதிவு, பலரது கவனத்தையும் ஈர்த்துள்ளது.

“கல்லூரியில் ஒன்றாகப் படித்து, இப்போது மருத்துவராக இருக்கும் நண்பன் ஒருவன், ரிசர்வேசனை எதிர்த்து, சில நாட்கள் முன்பு ஸ்டேட்டஸ் போட்டிருந்தான். என்னுடன் வேலூர் மருத்துவக் கல்லூரியில் ஒரே நாளில் சீட் கிடைத்த மாணவர்களின் அட்டவணையை டவுண்லோடு செய்து, ஒரு நினைவுக்காக பிரின்ட் செய்து வைத்திருந்தோம்.

அதில் அந்த ரிசர்வேசனை எதிர்த்த நண்பன், ‘பி.சி. ரிசர்வேசன்’ சீட்டில்தான் மருத்துவத்தில் சேர்ந்திருப்பது தெரிந்தது.

நம்மில் பலருக்கும் நாம் எந்த சீட்டில் படித்தோம் என்பதே தெரிவதில்லை. இந்த 69 சதவிகித இட ஒதுக்கீட்டில் மருத்துவம், பொறியியல் படித்துவிட்டு, எங்கேனும் மேற்குலக நாடுகளில் உக்காந்துகிட்டு ரிசர்வேசனுக்கு எதிராக மீம்/ போஸ்ட் / ரைட் அப் எழுதுவது என்ன நியாயம்? - முதல்ல, நீங்க அந்த ரிசர்வேசன்லதான் வந்தீங்க என்பதை மறந்துறாதீகப்பு... ஏத்திவிட்ட ஏணிய எட்டி உதைக்கலாமோ?

ஏனய்யா... இந்த சமுதாயம் 2,000 வருசமா சமமா இல்ல. அத ஒத்துக்கோங்க முதல்ல. ஏன்? இப்பகூட சமமா இல்லை. ஒரு சாராரை படிக்கவே விடாம அவன் அப்பன், பாட்டன், பூட்டன் பாத்த வேலைய பாக்குறதுதான் சரின்னு இந்த சமுதாயம் சொல்லிட்டிருந்துச்சு. இந்த சமுதாயத்த ஓரளவு சரிபண்ணத்தான் ரிசர்வேசன் வந்துச்சு. பல பேரோட நெனப்பு என்ன தெரியுமா? ரிசர்வேசன்னா அது தரமற்றதுனு நினைக்கறாங்க. அப்படி இல்ல... புலிக்கும் புலிக்கும்தான் போட்டி இருக்கணும் புலிக்கும் பூனைக்கும் போட்டி வச்சா அது சரி சமமா இருக்குமா? அதுலயும் அந்தப் பூனையோட காலையும் ஒடச்சுட்டு போட்டி வைக்கிறது சரியா?

சமீபத்தில்கூட ஒரு போஸ்ட் பார்த்தேன். நீட் பி.ஜி. (NEET PG) கவுன்சிலிங்குல 4,000 ஆல் இந்தியா ரேங்க் எடுத்தவருக்கு சீட் கிடைக்கலையாம். ஆனால், 40,000 ஆல் இந்தியா ரேங்க் எடுத்தவனுக்கு சீட் கிடைச்சுருச்சாம்.

இது பெரிய அநீதின்னு போட்டு பரப்பிட்டு கெடந்தாங்க. அந்த 40,000 ரேங்க் எடுத்தவன், ஒரு பழங்குடி இனத்தவன் என்பதை மறந்துவிடுகிறார்கள்” என நீள்கிறது அவரது பதிவு.

## ஃப்ளாஷ்பேக்



### குடும்பத்தோடு தலைவரைக் கண்டோம்!



வாசு கருணாநிதி

2014-ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம், நான் தலைமைக் கழகச் சொற்பொழிவாளராக அறிவிக்கப்பட்டேன். அதையடுத்து, நம் தானைத் தலைவர் கலைஞர் அவர்களை இல்லத்தில் சந்தித்து வாழ்த்து பெற்றேன். என்னுடன், என் தந்தை ஆர்.வாசுதேவன், மனைவி சரிதா, மகள் சாந்தி பிரியதர்ஷினி மற்றும் மகன் திலீபன் ஆகியோரும் வந்து வாழ்த்து பெற்றது என் வாழ்நாளில் மறக்க முடியாத நாளாக அமைந்தது.

**- வாசு கருணாநிதி,**
**தலைமைக் கழகச் சொற்பொழிவாளர்,**
**திருவொற்றியூர், சென்னை**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## நறுக்கு

### தமிழ்நாட்டின் முதல் சமத்துவபுரம்!

17.08.1998 அன்று மதுரை திருமங்கலத்தை அடுத்த மேலக்கோட்டையில், தமிழ்நாட்டிலேயே முதன்முதலாக ‘தந்தை பெரியார் நினைவு சமத்துவபுரம்’ திறக்கப்பட்டது. 100 தனித்தனி வீடுகள் கொண்ட இந்த சமத்துவபுரத்தில் 40 வீடுகள், பட்டியல் சமூகத்தினருக்கும், 25 வீடுகள் பிற்படுத்தப்பட்ட சமூகத்தினருக்கும், 20 வீடுகள் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கும், 10 வீடுகள் பிற சமூகத்தினருக்கும் ஒதுக்கப்பட்டன. இந்த சமத்துவபுரத்தில் அனைத்து சாதியினருக்கும் சமூக நலக்கூடமும் ஒன்றுதான், மயானமும் ஒன்றுதான்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131